# ஓய்வூதியம் பற்றிய ஒரு கையேடு

.........

முதன்மை தொலைத்தொடர்பு கணக்கு
கட்டுப்பாட்டாளர் அலுவலகம்
80 அண்ணா சாலை
சென்னை-600002

# பொருளடக்கம்


1. ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிகள்
2. ஓய்வூதியம் கணக்கிடப்படும் முறை
3. கம்யூடேசன் தொகை
4. பணிக்கொடை
5. குடும்ப ஓய்வூதியம்
6. குடும்ப ஓய்வூதியத்திற்கு தகுதியான குடும்ப நபர்கள்.
7. அகவிலைப்படி.
8. ஓய்வூதியதாரர்கள் கவனிக்க வேண்டிய சில முக்கிய தகவல்கள்.
9. பணி நிறைவு அடையும் முன்பு கவனிக்கப்பட வேண்டிய சில குறிப்புகள்.
10. மாதாந்திர ஓய்வூதியம் கணக்கிடப்படும் முறை.

# ஒருவர் பணி ஓய்வு அடையும் பொழுது அவருக்கு கிடைக்கக்கூடிய ஓய்வூதியம் மற்ற பணிக்கொடைகள் என்னவென்று பற்றிய தகவல்களும், விளக்கமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**ஒருவர் ஓய்வு அடையும் போது கிடைக்கக்கூடிய பலன்கள்**

ஓய்வூதியம், கம்யூடேசன் மொத்தத் தொகை, பணிக்கொடை(கிராஜுவிட்டி) ப்ராவிடெண்ட் ∴பண்டு விடுப்பு மாற்றுத் தொகை.

**ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிகள்:-**

ஒருவருடைய பணி நிறைவு அவருக்கு 60 வயது முடியும் பொழுது பணி ஓய்வு கொடுக்கப்படும். ஓய்வூதியம் பெறுவதற்கு குறைந்த பட்ச பணிக்காலம் 10 வருடங்கள் இருக்க வேண்டும். ஒருவருடைய பணிக்காலம் 9 வருடங்கள் 9 மாதங்கள் இருந்தாலும் அவை 10 வருடங்களாக எடுத்துக் கொள்ளப்படும்.

பணி ஓய்வு பெறும் சமயத்தில் எந்த விதமான ஒழுங்கு நடவடிக்கையோ அல்லது நீதி மன்ற நடவடிக்கையோ நிலுவையில் இருக்கக் கூடாது. அப்படி இருப்பின் தற்காலிக ஓய்வூதியத்திற்கு மட்டும் தகுதியானவர் ஆவார்.

**ஓய்வூதியம் கணக்கிடப்படும் முறை:-**

ஒருவரின் பணிக் காலத்தில் ஓய்வு பெறுவதற்கு முன் உள்ள பத்து மாதங்களின் சராசரி அடிப்படை ஊதியத்தின் 50 விழுக்காடு

அல்லது

ஓய்வு பெறும் தினத்தன்று பெறுகின்ற அடிப்படை ஊதியத்தின் 50 விழுக்காடு.

இவையிரண்டில் எந்த ஒன்று அதிகமான பயனளிக்குமோ அதுவே ஓய்வூதியமாக நிர்ணயிக்கப்படுகிறது.

(i) பணி நிறைவு(Superannuation) பெற்றவருக்கு மட்டும் மேலே சொல்லப்பட்ட முறை பொருந்தும்.

(ii) பணி விருப்ப ஓய்வு(Voluntary Retirement) பெற்றவருக்கு 10ஆண்டுகளுக்கு மேல் 20 ஆண்டுகளுக்குள் பணிக்காலம் இருந்தால் விகிதாச்சார முறைப்படி பென்சன் கணக்கிடப்படும்.

(iii) பணி விருப்ப ஓய்வு பெற்றவருக்கு பணிக்காலம் 20 ஆண்டுகளோ அல்லது அதற்கும் மேலோ இருந்தால் முழுமையான பென்சன் அதாவது அடிப்படை ஊதியத்தில் 50 விழுக்காடு முழுமையாகத் தரப்படும்.

**எடுத்துக்காட்டு**

ஒருவர் 30.9.2010 அன்று பணி ஓய்வு பெறுகின்றார். அவருடைய பணிக்காலம் 25 வருடங்கள். அவர் ஓய்வு பெற்ற பொழுது அவருடைய அடிப்படை ஊதியம் ரூ.30070. அவரது சராசரி 10 மாத அடிப்படைச்சம்பளம் ரூ.29980 என்றால் அவரது ஓய்வூதியம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

பென்சன் = அடிப்படைச்சம்பளம் X 50%

= 30070 X 50% = ரூ. 15035

பென்சன் = பத்துமாத சராசரி அடிப்படைச்சம்பளம் X 50%

= 29980 X 50% = ரூ. 14990

அவரது ஓய்வூதியம் = ரூ.15035/- என்று நிர்ணயிக்கப்படுகிறது.

**கம்யூடேசன் தொகை:-**

ஒருவருடைய ஓய்வூதியத்தில் அதிக பட்சமாக 40 விழுக்காடு வரை அரசாங்கத்திற்கு கொடுத்துவிட்டு அதற்கு ஈடான முழுத்தொகையை அவர் பெற்றுக்கொள்ளலாம். கம்யூடேசன் தொகை கீழ்க்கண்ட முறையில் கணக்கிடப்படும்.

40% ஓய்வூதியம் X 12 X 8.194.

**எடுத்துக்காட்டு:-**

அடிப்படை ஓய்வூதியம் ரூ.10000 என்று வைத்துக்கொண்டால் அவர் 40 விழுக்காடு வரை விருப்பம் தெரிவித்திருந்தால் அவருக்கு கிடைக்கும் கம்யூடேசன் மொத்தத் தொகை

4000 X 12 X 8.194 = 3,93,312/-

இதில் பென்சன் 10000 அவற்றின் 40 விழுக்காடு ரூ.4000. ஆகையால் அவருக்கு கிடைக்கும் தொகை மூன்று லட்சத்து தொண்ணூற்றி மூன்றாயிரத்து முன்னூற்றி பன்னிரண்டு ரூபாய்.

கம்யூடேசன் மொத்தத் தொகை வாங்கிய தேதியிலிருந்து 15 வருடங்கள் வரை கம்யூட் செய்த தொகை ஓய்வூதியத்திலிருந்து குறைத்து, மீதமிருக்கும் ஓய்வூதியம் தான் மாதாமாதம் ஓய்வூதியமாக வழங்கப்படும்.

**எடுத்துக்காட்டு:-**

ஒருவர் பணி நிறைவு ஓய்வு பெற்ற நாள் 30.6.2010(Superannuation). அவருடைய மொத்தப்பென்சன் ரூ.10000, அவருடைய கம்யூடேசன் 40% பெறும் தேதி 5.7.2010 என்று எடுத்துக்கொண்டால் அவர் கம்யூட் செய்த ரூ.4000 அவருக்கு எப்போது திரும்பக் கிடைக்கும்?

பென்சன் = ரூ.10000

கம்யூடேசன் = ரூ. 4000

--------------------------

மீதித்தொகை= ரூ. 6000

--------------------------

1.7.2010 லிருந்து 30.6.2025ம் தேதி வரையில் அவருக்கு கிடைக்கும் ஓய்வூதியம் ரூ.6000 மற்றும் ரூ.10000க்கான அகவிலைப்படி பெறுவார். 1.7.2025லிருந்து அவர் கம்யூட் செய்த தொகை ரூ.4000 அவரது ஓய்வூதியத்தில் சேர்க்கப்படும். அதாவது ரூ.10000 மற்றும் அதற்கான அகவிலைப்படியைப் பெறுவர்.

**பணிக்கொடை:-**

ஒவ்வொருவரின் பணிக் காலத்திற்கேற்ப பணிக்கொடை (கிராஜ்விட்டி) முழுத்தொகையாக வழங்கப்படுகிறது. இத்தொகை அதிக பட்சமாக ரூ.10,00,000(பத்து லட்சம்) வரை வழங்கப்படுகிறது. பணிக்கொடைக்கு குறைந்த பட்சத்தொகை கிடையாது.

பணிக்கொடை கணக்கிடும் பொழுது ஒருவரின் பணிக்காலம் 33 ஆண்டுகளுக்கு மேலாக இருப்பினும் அதிக பட்சமாக 33 ஆண்டுகளாகத்தான் எடுத்துக் கொள்ளப்படும்.

பணிக்கொடை கணக்கிடப்படும் முறை:-

(அடிப்படைச் சம்பளம் + அகவிலைப்படி) X பணிக்காலம் x 2

-----------------------

4

**எடுத்துக்காட்டு -**

'A' என்பவர் பணி ஓய்வு பெற்ற நாள் 31.12.2010. அவருடைய அடிப்படை ஊதியம் ரூ.20000 - 1.10.2010 தேதியிலிருந்து அகவிலைப்படி 39.8% சதவிகிதம் - பணிக்காலம் 36 வருடம். அவருக்கு கிடைக்கும் பணிக்கொடை என்ன?
அவர் பணியில் சேர்ந்த வருடம் 1978 மே மாதம் 5ம் தேதி.

$$(20000 + 7960) = \frac{27960 \times 33 \times 2}{4} = 4{,}61{,}340.$$

இதில் அகவிலைப்படி, அடிப்படை ஊதியத்தில் 39.8% சதவிகிதம் கணக்கிடப்பட வேண்டும். கணக்கிடப்பட்ட பணிக்காலம் 33 ஆண்டுகளுக்கு மேலாக இருப்பினும் 33 வருடங்கள் மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அகவிலைப்படி IDA Rate ல் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது.

இந்த பணிக்கொடையானது (Gratuity) ஓய்வு பெறும் சமயத்தில் வேலை பார்த்த அலுவலகத்திற்கு நிலுவைத்தொகை ஏதேனும் பாக்கி இருந்தால் அதை பிடித்தம் செய்த பிறகே, மீதித் தொகையை பணிக்கொடையாக வழங்கப் படும்.

அலுவலக குடியிருப்பில் இருப்பவராக இருந்தால், பணிக்கொடையில் 10% சதவிகிதம் பிடித்தம் செய்து வைக்கப்படும். அவர் அந்த குடியிருப்பிலிருந்து எப்போது மாற்றம் செய்கின்றாரோ அந்த தகவல் வந்த பிறகே பிடித்தம் செய்யப்பட்ட தொகை திரும்ப வழங்கப் படும்.

**குடும்ப ஓய்வூதியம் :-**

ஒருவர் பணிக்காலத்தில் இறக்க நேரிட்டால் அவரது மனைவி/கணவருக்கு உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம் இறந்த தினத்திற்கு அடுத்த நாள் முதல் பத்து வருட காலத்திற்கு வழங்கப்படும்.

உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கு அந்த அலுவலர் குறைந்த பட்சமாக 7 வருட காலம் பணி நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

**உயர்த்தப்பட்ட ஓய்வூதியம் கணக்கிடப்படும் முறை :-**

அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவிகிதம் அல்லது இருமடங்கு சாதாரண குடும்ப ஓய்வூதியம் இவற்றில் எது குறைவாக உள்ளதோ அது உயர்த்தப்பட்ட ஓய்வூதியமாக கணக்கில் எடுத்துக் கொள்ளப் படுகிறது.

## சாதாரண குடும்ப ஓய்வூதியம் :-

அடிப்படைச் சம்பளத்தில் 30% சதவிகிதம் சாதாரண குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. தற்பொழுது நடைமுறையில் உள்ள பென்சன் சட்டப்படி சாதாரண குடும்ப ஓய்வூதியம் குறைந்த பட்சமாக ரூ.3500/- (CDA) வழங்கப்படுகிறது.

ஒருவர் பணி நிறைவு அடைந்தபிறகு இறக்க நேரிட்டால் அவரது மனைவி / கணவருக்கு உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம் இறந்த நாளுக்கு அடுத்த நாள் முதல் ஏழு வருட காலத்திற்கு அல்லது அவர் உயிரோடிருப்பின் அவர் வயது எப்பொழுது 67 வயது முடிகிறதோ இதில் (மேலே சொன்ன இரண்டில்) எது முன்னரோ அதுவரை வழங்கப்படும். அதன் பின்னர் சாதாரண குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும்.

## குடும்ப ஓய்வூதியத்திற்கு யார் தகுதியானவர்கள்.

i) கணவர் / மனைவி

ii) மகன் / மகள் - 25 வயது முடியும் வரை அல்லது ஏதாவது பணியில் அமரும்வரை அல்லது திருமணம் ஆகும்வரை. இவற்றில் எது முன்னரோ அதுவரை குடும்ப ஓய்வூதியத்திற்கு தகுதியானவர்.

iii) வளர்ப்பு மகன் / மகள் :-

iv) மாற்றுத்திறன் உள்ள மகன்/ மகள் :- வாழ்நாள் முழுதும்

v) விதவை / விவாகரத்து / திருமணமாகாத பெண் வாரிசுகள் :-

vi) ஓய்வூதியதாரரை முழுதும் சார்ந்திருக்கும் பெற்றோர்கள்.

vii) பணி நிறைவு பெற்ற பிறகு திருமணம் செய்து கொண்டால் அந்த மனைவி / கணவர் / குழந்தைகள்.

## அகவிலைப்படி

பணியில் இருக்கும் அலுவலர்களுக்கு என்ன அகவிலைப்படி வழங்கப்படுகிறதோ அதுவே பென்சன்தாரர்களுக்கும் வழங்கப்படுகிறது. பி.எஸ்.என்.எல் ஊழியர்களுக்கு, கம்யூடேசன், பணிக்கொடை (க்ராஜுவிட்டி) ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதி தொகை இவை அனைத்தும் DOT யிலிருந்து வழங்கப்படுகிறது. இதைத் தவிர விடுப்புக் காலத் தொகை இன்ஸ்யூரன்ஸ் போன்றவைகள் பி.எஸ்.என்.எல் அலுவலகத்திலிருந்து கிடைக்கப் பெறும்.

## Rates of IDA/CDA-ANNEXURE

**The Rates of IDA Rates in R/O IDA BSNL Retirees whose pay has been revised w.e.f. 01/01/2007 as per Revised Pay Scales for the period from 01/01/2007 are also appended below. (S.No.I)**
**[DEARNESS RELIEF PAYABLE AT REVISED IDA RATES ]**

| MONTH | IDA % | MONTH | IDA % | MONTH | IDA % |
|---|---|---|---|---|---|
| 01/01/2007 | 0.0 | 01/01/2009 | 16.6 | 01/01/2011 | 43 |
| 01/04/2007 | 0.8 | 01/04/2009 | 16.9 | | |
| 01/07/2007 | 1.3 | 01/07/2009 | 18.5 | | |
| 01/10/2007 | 4.2 | 01/10/2009 | 25.3 | | |
| 01/01/2008 | 5.8 | 01/01/2010 | 30.9 | | |
| 01/04/2008 | 6.3 | 01/04/2010 | 34.8 | | |
| 01/07/2008 | 9.2 | 01/07/2010 | 35.1 | | |
| 01/10/2008 | 12.9 | 01/10/2010 | 39.8 | | |

**IDA Rates in R/O BSNL Retirees who have not been allowed the benefit of merger of 50% of IDA with Basic Pay [S.No.II a)] (IDA PAY SCALES BSNL)**

| | IDA % | MONTH | IDA% | MONTH | IDA% |
|---|---|---|---|---|---|
| 01/10/2000 | 28.0 | 01/04/2004 | 45.3 | 01/10/2007 | 76.0 |
| 01/01/2001 | 29.2 | 01/07/2004 | 45.8 | 01/01/2008 | 78.6 |
| 01/04/2001 | 28.3 | 01/10/2004 | 49.2 | 01/04/2008 | 79.4 |
| 01/07/2001 | 29.3 | 01/01/2005 | 51.4 | 01/07/2008 | 84.4 |
| 01/10/2001 | 33.4 | 01/04/2005 | 51.2 | 01/10/2008 | 90.6 |
| 01/01/2002 | 35.2 | 01/07/2005 | 52.1 | 01/01/2009 | 96.8 |
| 01/04/2002 | 34.9 | 01/10/2005 | 54.6 | 01/04/2009 | 97.3 |
| 01/07/2002 | 35.5 | 01/01/2006 | 58.1 | 01/07/2009 | 100 |
| 01/10/2002 | 38.6 | 01/04/2006 | 58.9 | 01/10/2009 | 111.6 |
| 01/01/2003 | 40.6 | 01/07/2006 | 60.4 | 01/01/2010 | 121.0 |
| 01/04/2003 | 39.6 | 01/10/2006 | 65.2 | 01/04/2010 | 127.5 |
| 01/07/2003 | 41.8 | 01/01/2007 | 68.8 | 01/07/2010 | 128 |
| 01/10/2003 | 44.0 | 01/04/2007 | 70.2 | 01/10/2010 | 136.1 |
| 01/01/2004 | 44.9 | 01/07/2007 | 71.1 | 01/01/2011 | 141.5 |

**IDA Rates in R/O BSNL Employees who have allowed the benefit of merger of 50% of IDA with Basic Pay [S.No.II. b)]**

| MONTH | IDA % | MONTH | IDA % | MONTH | IDA % |
|---|---|---|---|---|---|
| 01/01/2007 | 18.8 | 01/01/2009 | 46.8 | 01/01/2011 | 91.5 |
| 01/04/2007 | 20.2 | 01/04/2009 | 47.3 | | |
| 01/07/2007 | 21.1 | 01/07/2009 | 50.0 | | |
| 01/10/2007 | 26.0 | 01/10/2009 | 61.6 | | |
| 01/01/2008 | 28.6 | 01/01/2010 | 71.0 | | |
| 01/04/2008 | 29.4 | 01/04/2010 | 77.5 | | |
| 01/07/2008 | 34.4 | 01/07/2010 | 78.0 | | |
| 01/10/2008 | 40.6 | 01/10/2010 | 86.1 | | |

**The reduced percentage of IDA Relief is applicable to cases wherein 50% merger of IDA scale of pay has been reckoned for calculation of pension and other benefits with indication in both halves of PPO and forwarding memo to this effect. [DEARNESS PAY TAKEN FOR CALCULATION OF PENSION, HENCE IDA RELIEF PAYABLE AT REDUCED RATES]**

| | CDA Rates of Dearness Relief after $6^{th}$ CPC . | | | | |
|---|---|---|---|---|---|
| 01/01/2006 | 0.0 | 01/01/2008 | 12.0 | 01/01/2010 | 35.0 |
| 01/07/2006 | 2.0 | 01/07/2008 | 16.0 | 01/07/2010 | 45.0 |
| 01/01/2007 | 6.0 | 01/01/2009 | 22.0 | | |
| 01/07/2007 | 9.0 | 01/07/2009 | 27.0 | | |

## ஓய்வூதியதாரர்களட கவனிக்க வேண்டிய சில முக்கியமான தகவல்கள்

i) பணி நிறைவு அடையும் அலுவலர், தான் எங்கு ஓய்வூதியம் பெற விரும்புகிறாரோ அதைத் தேர்ந்தெடுக்க வேண்டும்(போஸ்ட் ஆபீஸ் அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் ஏதாவது ஒன்று)

ii) தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கியிலோ அல்லது போஸ்ட் ஆபீஸிலோ தனியாக ஓய்வூதியத்திற்கென்றே சேமிப்புக்கணக்கு ஒன்றைத் தொடங்க வேண்டும். உங்களது இதர வரவு செலவு கணக்குகளுக்கு இந்த சேமிப்புக் கணக்கை உபயோகப் படுத்தாமல் இருந்தால் மிகவும் நன்று.

iii) உங்களுடைய ஓய்வூதிய ஆணை சம்பந்தப்பட்ட போஸ்ட் ஆபீஸ் அல்லது வங்கிக்கு அனுப்பப்பட்ட தகவல் உங்களுக்கு கிடைத்தவுடன் போஸ்ட் ஆபீஸ் அல்லது வங்கியை அணுகவும்.

iv) உங்களுடைய பென்சன் புத்தகத்தை உடனே போஸ்ட் ஆபீஸ் அல்லது வங்கி அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளவும். புத்தகம் உங்களைச் சார்ந்தது ஆகும்.

v) உங்களுடைய பென்சன் புத்தகத்தை எந்தச் சூழ்நிலையிலும் பத்திரமாக பாதுகாக்கவும்.

vi) ஓவ்வொரு வருடமும் நவம்பர் மாதத்தில் லை.ஃப் சர்ட்டிபிகேட்டை மறக்காமல் சம்பந்தப்பட்ட வங்கியிலோ அல்லது போஸ்ட் ஆபீஸிலோ தவறாமல் கொடுக்க வேண்டும்.

vii) ஓவ்வொரு மாதமும் உங்கள் சேமிப்புக் கணக்கில் பென்சன் வரவு வைக்கப்பட்டதை தவறாமல் சரிபார்க்கவும்.

viii) சரி பார்க்கும்போது அதிகமாகவோ அல்லது குறைவாகவோ சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தால் அதை சம்பந்தப்பட்ட போஸ்ட் ஆபீஸ் அல்லது வங்கி அலுவலருக்கு தெரிவிக்கவும்.

ix) DOT க்கு எழுதும் எல்லா விண்ணப்பங்களிலும் உங்களது பென்சன் நம்பர் ஓய்வு பெற்ற தேதி மற்றும் தற்போதைய விலாசத்தையும் தெரிவிக்க வேண்டும்.

## பணி நிறைவு அடையும் முன்பு கவனிக்கப்பட வேண்டிய சில குறிப்புகள்

i) பணி நிரந்திர ஆணை உங்கள் சர்வீஸ் புத்தகத்தில் உள்ளதா (Confirmation Order) என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ii) குடும்ப நபர்களின் மொத்தப் பெயர்களையும் பாரம் 3ல் பூர்த்தி செய்து கொடுத்துள்ளீர்களா என்பதைக் கவனிக்க வேண்டும். கணவன்/மனைவி/குழந்தைகளின் பிறந்த தேதியையும் மறக்காமல் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

iii) பணிக்கொடை(க்ராஜுவிட்டித் தொகை) பெறுவதற்கு (உங்கள் காலத்திற்குப் பிறகு) வாரிசு நியமனம் செய்திருக்க வேண்டும். வாரிசு நியமனப் பாரத்தில் நீங்கள் கையெழுத்திட்டிருக்க வேண்டும். மேலும் உங்கள் உயர் அதிகாரி அதற்கு ஒப்புதல் அளித்துள்ளாரா என்பதையும் கவனிக்க வேண்டும்.(Death before retirement case).

iv) மேலே சொன்னது போல ப்ராவிடெண்ட் ஃபண்டு தொகைக்கும்(GPF) வாரிசு நியமனம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

v) உயர் அதிகாரி வாரிசு நியமனப் பாரத்தில் ஒப்புதல் அளிக்காமல் இருந்தால் அதற்கு மதிப்பு இல்லாமல் போய் விடும்.

vi) மகனோ மகளோ மாற்றுத்திறனாளியாக இருந்தால் மருத்துவச் சான்றிதழ் பெற்று அதை உங்கள் அலுவலகத்தில் சமர்ப்பிருத்திருக்க வேண்டும்.

vii) கணவனோ/மனைவியோ மனநிலை சரியில்லாதவராக இருந்தால் அதற்கான மருத்துவச் சான்றிதழோடு, சட்டப்படி ஒருவரை கார்டியனாக நியமிக்கப் படவேண்டும்.

viii) கணவன்/மனைவி சேர்ந்தெடுத்த புகைப்படம் பென்சன் பெறுவதற்கு DOT அலுவலகத்திற்கு அனுப்பும்போது சமீபத்தில் எடுத்த புகைப்படமாக இருத்தல் வேண்டும்.

ix) ஓய்வூதியம் வாங்குவதற்கு தேர்ந்தெடுத்திருக்கும் வங்கி தேசியமயமாக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

x) பென்சன் பெறுவதற்கு அப்ளிகேசன் கொடுக்கும் போது உங்களுடைய தொலைபேசி/கைபேசி எண்களை எழுதிக் கொடுக்கவும். அத்துடன் உங்களுடைய பென்சன் சேமிப்புக் கணக்கு நம்பரையும் தெரியப்படுத்தவும்.

xi) உங்களது வீட்டு விலாசம் மாறும் போது, மாற்றிய விலாசத்தை DOTக்கும் உங்கள் பி.எஸ்.என்.எல் அலுவலகத்திற்கும் தவறாமல் தெரியப்படுத்தவும்.

xii) உங்கள் ஓய்வூதியத்தை வங்கியிலிருந்து தபால் அலுவலகத்திற்கோ அல்லது தபால் அலுவலகத்திலிருந்து வங்கிக்கோ மாற்றிக் கொள்ளும் வசதிகள் உண்டு.

ஒரு வங்கியிலிருந்து மற்றொரு வங்கிக்கோ அல்லது ஒரு தபால் அலுவலகத்திலிருந்து மற்றொரு தபால் அலுவலகத்திற்கோ கூட மாற்றும் வசதி உள்ளது. இந்த மாற்றம் இந்தியாவின் எந்த மாநிலத்திற்கு வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்.

இவ்வாறு மாறுதல் செய்யும்போது ஓய்வூதியப் புத்தகம் அதன் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் CCA அலுவலகத்தின் மூலமாக செயல்படுத்தப் படும்.

இது போன்ற மாறுதல் செய்ய வசதிகள் இருந்தாலும் அடிக்கடி மாற்றம் செய்யாமல் இருந்தால் மிகவும் நல்லது.

## மாதாந்திர ஓய்வூதியம் கணக்கிடப்படும் முறை :-

## எடுத்துக்காட்டு

ஒருவர் 30.11.2010 அன்று பணி நிறைவு பெற்று ஓய்வு பெறுகிறார். அவரது ஓய்வூதியம் (பென்சன்) ரூ.10000 கம்யூட் செய்யப்பட்ட தொகை ரூ.4000 – அகவிலைப்படி 30.11.10 அன்று 39.8 சதவிகிதம். 31.12.2010ல் அவருடைய பென்சன் கணக்கில் எவ்வளவு வரவு வைக்கப்பட்டிருக்கும்?

| | | |
|---|---|---|
| பென்சன் | = | ரூ.10000 |
| அகவிலைப்படி | = | ரூ. 3980 |
| மொத்தம் | = | ரூ 13980 |
| கம்யூடேசன் | = | ரூ 4000 |
| | | 9980 |

அவருடைய சேமிப்புக் கணக்கில் ரூ.9980 வரவு வைத்திருக்க வேண்டும். அகவிலைப்படி மாறும் போது அவருடைய ஓய்வூதியமும் மாறுபடும்.

## Contact Persons list of Bank / Post office

| Bank / Post Office | City | Contact Person | Address | Land line Number | Mobile Number | E.Mail ID |
|---|---|---|---|---|---|---|
| State Bank Of India | Chennai | Sridaran Kumaresan | Chief Manager Manager Centralised Pension Procession Centre 112/4, Kaliamman Koil Street, Sayee Nagar, IInd Floor Chinmaya Nagar Branch, Virugambakkam, Chennai 600092 | 044-23772750 | 9444441634 | cppc.zoche@sbi.co.in |
| Canara Bank | Tirunelveli | Balan | Accounts Section, Tirunelveli | 0462-2334795 0462-2323957 | | actirunelveli@canban.co.in |
| Canara Bank | Tirchy | Perumal | Circle Office, Tirchy | 0431-2468212 | | |
| Canara Bank | Madurai | Kameswaran | Manager, Accounts Section, Pandyan House, 118-B, West Perumal Maistry St. IInd Floor, Madurai 625 001 | 2452-2340919 2452-2341946 | | |
| Canara Bank | Madurai | Mohan/Sakthivel | Manager, BSIC section, Circle Office, St. Marys Campus, East Veli Street, Madurai 625001 | 2452-2330335 to38 | | |
| Bank of India | Chennai | Venkateswara Rao | Manager, Main Office, 26, Errabalu Street, Chennai -1 | 044-66777555 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Indian Bank | Chennai | Subramanian | Centralised Pension Processing Centre, Ist Floor, 7, Prakasam Road, T.Nagar, Chennai -17 | | 9445030401<br>8056099369 | cppc@indianbank.co.in |
| Central Bank Of India | Chennai | Suryanarayanan I.N | Manager, No.26, IInd line beach, Chennai -1 | | 9444461232 | |
| Syndicate Bank | Chennai | Chandra Mohan | Manager, Regional Office, Ist Floor, Leelavathi Building, 69, Armenian Street, Chennai -1 | 044-25219968<br>044-25249498<br>044-25249966 | 9840521899 | chnro@syndicatebank.co.in<br>tn.6022chnro@syndiatebank.co.in |
| Syndicate Bank | Coimbatore | | Central Accounts Office, 733, Ist Floor, Oppanakara Street, Coimbatore | 0422-2306202 | | |
| Indian Overseas Bank | Chennai | Anbumani / Arunachalam | Manager, Gove. Accounts Dept. 6th Floor, Backside Building, Opp. TVS, Chennai-2 | 044-28519567 | | |
| Bank of Baroda | Chennai | Sreeram | Manager, Sakthi Towers, 766 Anna Salai<br>Chennai -2 | 044-23454359/360/362/357 to 362 | | sermas@bankofbaroda.co.in |
| Departmet of Posts | Chennai | Malaichamy Accounts Officer | Pension Section<br>O/o General manager (PA&F)<br>Ethiraj Salai<br>Chennai -8 | 044-28275655 | 9445489840 | |